# சிருஷ்டிப்பின் நாட்கள்
# இருபத்து நான்கு மணி நேரம் உள்ள நாட்களா?
### வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்

தேவன் சகலவற்றையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்தார் (யாத்.20:11) என்பதை ஆதியாகமம் முதலாம் அதிகாரம் அறியத்தந்தாலும், தற்காலத்தில் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள், இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களை இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட சாதாரண நாட்களாகக் கருதுவதில்லை. ஏனெனில், உலகமும் உயிரினங்களும் உருவாகி இன்றைய நிலையை அடைவதற்கு கோடிக்கணக்கான யுகங்கள் ஆகியுள்ளன என்னும் "சார்ள்ஸ் டார்வீனின் பரிணாமக் கோட்பாட்டை" ஆதரிக்கும் ஆராய்ச்சியாளர்களினால், ஆறு நாட்களில் தேவன் சகலவற்றையும் சிருஷ்டித்தார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. இதனால், ஒரு நாளில் தேவன் செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தையும் செய்வதற்கு அவருக்கு இருபத்து நான்கு மணிநேரம் போதாது என்று கருதும் இவர்கள்,[1] பரிணாமச் செயலின் மூலமாகவே தேவன் சகலத்தையும் சிருஷ்டித்துள்ளார் என்று வாதிடுகின்றனர்.[2] ஆனால், இது வேதாகம சத்தியத்தைய முரண்படுத்தும் விளக்கமாக உள்ளது. ஏனெனில், உலகமும் உயிரினங்களும் பரிணாமச் செயலின் மூலம் இன்றைய நிலையை அடைந்தது என்று வேதாகமம் போதிக்கவில்லை. மேலும், பரிணாமக் கோட்பாடு மானிட சிந்தையின் ஒரு ஊகமாக இருக்கின்றதே தவிர, நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மையாக இல்லை. ஏனெனில், "பரிணாம வளர்ச்சியை எவரும் விஞ்ஞானரீதியாக ஆய்வு செய்து கண்டுபிடிக்கவில்லை."[3]

சிருஷ்டிப்பின் நாட்களை இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட நாட்களாக ஏற்றுக்கொள்ளும் ஆராய்ச்சியாளர்களிலும் பெரும்பாலானவர்கள், இவற்றை "சிருஷ்டிப்பு நடைபெற்ற நாட்களாக" அல்ல, "சிருஷ்டிப்பு வெளிப்படுத்தப்பட்ட நாட்களாக" இருப்பதாகக் கருதுகின்றனர். அதாவது, உலகம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதைத் தேவன் மோசேக்கு ஆறு நாட்களில் வெளிப்படுத்தினார் என்பதே இவர்களுடைய விளக்கமாகும்.[4] ஆனால், ஆறு நிமிடங்களுக்குள் வாசிக்கக்கூடிய விஷயத்தை வெளிப்படுத்துவதற்குத் தேவனுக்கு ஆறு நாட்கள் தேவைப்பட்டது என்று கூறுவது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விளக்கமாக இல்லை. மேலும், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தை வாசிக்கும்போது, இது ஆறு நாட்கள் வெளிப்படுத்தலில் பெற்றுக்கொண்ட விஷயம் என்று எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில், "தேவன் ஒவ்வொரு நாளும் எவற்றை வெளிப்படுத்தினார் என்றல்ல, ஒவ்வொரு நாளும் எவற்றை சிருஷ்டித்தார் என்றே ஆதியாகமம் முதலாம் அதிகாரம் கூறுகிறது."[5] எனவே, விஞ்ஞானக் கோட்பாட்டுடன் வேதாகமத்தை ஒத்துப்போக வைப்பதற்காக, வேதாகமத்தில் எழுதப்படாததை அதன் விளக்கமாகக் கருதுவது மாபெரும் தவறாகும். இதனால்தான், தற்காலத்தில் அதிகளவு பிரபலமாயுள்ள "இலக்கிய சட்டகம்" (Literary Framework Theory) என்னும் விளக்கமும் தவறானதாகவே உள்ளது. ஏனெனில், இவ்விளக்கத்தின்படி ஆறு நாட்களாகத் தேவன் ஒவ்வொரு நாளிலும் சிருஷ்டித்தவைகளைப்பற்றி அல்ல, தேவன் சிருஷ்டித்தவைகள் அனைத்தும் ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் ஆறு பகுதிகளாக எழுதப்பட்டுள்ளது என்றும்,

---

[1] R.C.Newman & H.J.Eckelmann, *Genesis One and the Origin of the Universe*, p. 125.
[2] J.P.Moreland & J.M.Reynolds, ed., *Three Views on Creation and Evolution*, pp. 163-169.
[3] J.C.Whitcomb & H.M.Morris, *The Genesis Flood: The Biblical Record and Its Scientific Application*, p. 227.
[4] P.J.Wiseman, *Creation Revealed in Six Days*, p. 144; B. Ramm, *The Christian View of Science and Scripture*, pp. 149–152.
[5] D.Batten, ed., *The Creation Answers Book*, p. 50; H.Wolf, *An Introduction to the Old Testament Pentateuch*, p. 88. சில ஆராய்ச்சியாளர்கள் யாத்திராகமம் 20:11ல் சிருஷ்டித்தார் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஆஸ்சா" (*asah*) என்னும் எபிரெயச் சொல் "காண்பித்தார்" என்னும் அர்த்தத்தையும் கொண்டுள்ளது என்றும், இதனால் ஆதியாகம சிருஷ்டிப்பின் நாட்கள் சிருஷ்டிப்பு வெளிப்படுத்தப்பட்ட அல்லது காண்பிக்கப்பட்ட நாட்கள் என்று கூறுகின்றனர். ஆனால், இச்சொல்லுக்கு உருவாக்குதல், தயாரித்தல் செய்தல் என்னும் அர்த்தங்கள் உள்ளனவே தவிர, காண்பித்தல் என்னும் அர்த்தம் இல்லை (C.Taylor, "Days of Revelation or Creation" (1997), https://answersingenesis.org/docs/188.asp)

ஆறு நாட்களும் சிருஷ்டிப்புக் கதையின் ஆறு பகுதிகள் என்றும் கருதப்படுகின்றது.[6] இதனால், இத்தகைய விளக்கத்தின்படி ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தை வியாக்கியானம் செய்பவர்கள் சிருஷ்டிப்பின் நாட்களை சொல்லர்த்தமாக அல்ல, உருவகமாகவே கருதுகின்றனர்.[7]

விஞ்ஞான விளக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆராய்ச்சியாளர்கள் சிருஷ்டிப்பின் நாட்களை "ஆறு புவியியல் காலகட்டங்களாகக்" (six geologic ages) கருதுகின்றனர்.[8] இதனால் இவர்கள், "நாள்" என்பதை "யுகம்" அல்லது "காலகட்டம்" என்னும் அர்த்தத்தில் தவறாக விளக்குகின்றனர்.[9] இத்தகைய விளக்கம் முதற் தடவையாக 1823இல் இங்கிலாந்து சபையைச் சேர்ந்த "ஜோர்ஜ் ஃபேபர்" (George Faber) என்னும் இறையியலாளரினால் உருவாக்கப்பட்டது.[10] மேலும், கி.பி. நான்காம் நூற்றாண்டிலேயே ஒகஸ்டீன் என்னும் சபைத் தலைவர் சிருஷ்டிப்பின் நாட்களை சொல்லர்த்தமாக ஏற்றுக்கொள்ள முடியாதவராக இருந்தார்.[11] மேலும், சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் எதுவும் இல்லாத முதல் மூன்று நாட்களையும், முதலாம் நாள் இரண்டாம் நாள் மூன்றாம் நாள் என்று கூறமுடியாது என்னும் குழப்பத்தில் ஒரிகன் என்னும் சபைத் தலைவர் இருந்துள்ளார்.[12] இதனால், ஆரம்ப காலத்திலிருந்தே கிறிஸ்தவர்கள் சிருஷ்டிப்பின் நாட்களை சொல்லர்த்தமாக வியாக்கியானம் செய்யவில்லை என்று தற்காலத்தில் பலர் கருதுவதோடு,[13] இந்நாட்கள் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட நாட்கள் அல்ல என்றும்,[14] "ஒவ்வொரு நாளும் புதியதோர் சிருஷ்டிப்புக் காலத்தின் ஆரம்பமாய் உள்ளது"[15] என்றும், "ஒவ்வொரு நாளுக்கு இடையிலும் நீண்ட காலப் பகுதி இருக்கின்றது"[16] என்றும் எண்ணுகின்றனர்.

பரிணாமக் கோட்பாட்டின் பாதிப்புக்கு உட்பட்ட ஆராய்ச்சியாளர்கள் எத்தகைய விளக்கங்களைக் கொடுத்தாலும், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிருஷ்டிப்பின் நாட்கள், இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட நாட்களாகவே உள்ளன.[17] ஏனெனில், "நாள்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "யொம்" என்னும் எபிரெயச் சொல் பழைய ஏற்பாட்டில் 2301 தடவைகள் இத்தகைய அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.[18] இச்சொல் பன்மையில் உபயோகிக்கப்படும்போது, "பல நாட்கள்" என்னும் அர்த்தத்தைத் தந்தாலும், ஒருமையில் எப்பொழுதும் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட ஒரு நாளை அல்லது ஒரு நாளின் பகற்பொழுதையே குறிப்பதோடு, ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் ஒருமையிலேயே உள்ளது.[19] இதனால்தான், இச்சொல் இருபத்து நான்கு மணிநேரத்தைவிட அதிகமான

---

[6] J.S.Feinberg, *No One Like Him: The Doctrine of God*, p. 603; H.Blocher, *In the Beginning: The opening Chapters of Genesis*, pp. 49-50; M.G.Kline, "Because It Had Not Rained" In *Westminster Theological Journal*. 20 (1958), pp. 146-157; D.Hagopian, ed., *The Genesis Debate*, pp. 217-256, 279-303.

[7] C.J.Collins, "How Old is Earth? Anthropomorphic Days in Genesis 1:1-23" In *Presbyterian*. 20/2 (1994), pp. 2-15

[8] E.Sauer, *The Dawn of World Redemption*, p. 35. H.Miller, *The Testimony of the Rocks*, p. 143. Buswel, *Systematic Theology*, pp. 144-147.

[9] G.L.Archer, *A Survey of Old Testament Introduction*, p. 199.

[10] K.Ham, ed., *The New Answers Book 2: Over 30 Questions on Creation/Evolution and the Bible*, p. 67.

[11] St.Augustine, *City of God*, p. 350; St.Augustine, *Literal Meaning of Genesis*, 5.5.12. இதனால், சிருஷ்டிப்பைப்பற்றிய ஒகஸ்டீனின் விளக்கமும் பரிணாமக் கேட்பாட்டைப் போலவே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (H.F.Osborn, *From the Greeks to Darwin: The Development of the Evolutionary Idea Through Twenty-four Centuries*, p. 110).

[12] Origen, *On first Principles*, 4.3.1.

[13] T.Longman III, *Confronting Old Testament Controversies*, p. 29.

[14] D.A.Young, *Creation and the Flood: An Alternative to Flood Geology, and Theistic Evolution, and Christianity and the Age of the Earth*, p. 89; R.Youngblood, *How It All Began*, pp. 25-33; H.Blocher, *In the Beginning: The Opening Chapters of Genesis*, pp. 49-59.

[15] R.Newman & H.Ecklemann, *Genesis One and the Origin of the Earth*, p. 64-65.

[16] J.C.Lennox, *Seven Days that Divide the World*, p. 54.

[17] G.Von Rad, *Genesis: The Old Testament Library Commentary*, p. 65.

[18] K.Ham, ed., *The New Answers Book: Creation Evolution and the Bible*, p. 26; W.MacDonald, *Believer's Bible Commentary*, pp. 33-34; J.F.Walvoord & R.B Zuck, ed., *The Bible Knowledge Commentary – Old Testament*, p. 28; H.Morris, *The Beginning of the World: A Scientific Study of Genesis 1-11*, p. 25.

[19] J.Stambaugh, "The Days of Genesis: A Semantic Approach" In *Journal of Creation*. 5 (April 1991), pp. 70-78; R..F.Youngblood, ed., *The Genesis Debate*, p. 17.

காலத்தைக் குறிப்பிடும்போது, இதைப்பற்றிய விளக்கச் சொல் அதனுடன் சேர்க்கப்படுவது வழக்கம். அதாவது, “ஆயுள் நாள்” “கர்த்தருடைய நாள்” என்னும் சொற்பிரயோகங்கள் இருபத்து நான்கு மணிநேரத்தைவிட அதிகமான காலத்தைக் குறிப்பிடுகின்றது. ஆனால், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் இச்சொல் இவ்விதமான விளக்கக் குறிப்புடனோ, அல்லது பன்மையிலோ உபயோகிக்கப்படவில்லை. இதனால், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் இச்சொல் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட நாளையே குறிக்கின்றது.[20] மேலும், “முதலாம் நாள்” “இரண்டாம் நாள்” என்று நாட்கணிப்புடன் இச்சொல் உபயோகிக்கப்படும்போது இருபத்து நான்கு மணி நேரம் கொண்ட நாளையே குறிக்கும். ஆதியாகமம் முதலாம் அதிகாரத்திலும் இச்சொல் இவ்விதமாகவே சிருஷ்டிப்பின் ஆறுநாட்களையும் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள் ளது.[21]

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் “யொம்” என்னும் எபிரெயச் சொல் யூதர்களுடைய நாட்கணிப்பீட்டு முறையின்படி “சாயங்காலமும் விடியற்காலமுமாகி” என்னும் வாக்கியத்து டனேயே குறிப்பிடப்பட்டுள்ளது.[22] ஏனெனில், யூதர்களின் நாட்கணிப்பீட்டு முறையின்படி, மாலை ஆறு மணிக்கே ஒரு நாள் ஆரம்பமாகும். இதனால்தான், ஓய்வுநாள் கட்டளையைப்பற்றி வேதாகமம் விளக்கும்போது, “சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம் மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள்” (லேவி.23:32) என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில்,[23] ஓய்வு நாட்களில் மனிதர்கள் அந்த நாள் முடிவடைந்து அடுத்த நாள் ஆரம்பித்த பின்னர் வியாதியஸ்தர்களை அவரிடத்தில் கொண்டுவரும்போது, “அந்த நாளில் சூரியன் அஸ்தமித்ததிற்குப் பின்னர் அவரிடத்தில் வந்தனர்” (மாற்.1:32). இதற்குக் காரணம், யூதரின் நாட்கணிப்பீட்டின்படி, அவர்களுடைய நாளில் முதலில் வருவது சாயங்காலமாகும். இதனால்தான், நெருக்கடியான சூழ்நிலையில் ஒரு நாள் முழுவதும் ஜெபிப்பதைத் தேவனிடம் தெரிவிக்கும்போது, “அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்” (சங்.55:17) என்று சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான். இவ்வசனத்தில் “அந்தி” என்பது மாலை நேரத்தையும், “சந்தி” என்பது இரவின் முடிவில் வரும் காலை நேரத்தையும், “மத்தியானம்” என்பது காலை முதல் மாலை வரையுள்ள பகற் பொழுதையும் குறிக்கின்றது.[24] இதைப்போலவே, ஆதியாகமம் முதலாம் அதிகாரத்திலும் யூதர்களுடைய இத்தகைய நாட்கணிப்பீட்டின்படி “சாயங்காலமும் விடியற்காலமுமாகி” என்று ஒவ்வொரு நாளும் குறிப்பிடப்பட்டுள்ளது.[25] எனவே, ஆதியாகம நாட்கள் இருபத்து நான்கு மணிநேர நாட்களாகவே உள்ளன.[26] ஏனெனில், நீண்ட காலப் பகுதியை இவ்வாறு “சாயங்காலமும் விடியற்காலமுமாகி” என்னும் சொற்பிரயோகத்துடன் எவரும் உபயோகிப்பதில்லை.[27]

சிருஷ்டிப்பின் நாட்கள் இருபத்து நான்கு மணிநேரம் கொண்டவை என்பதற்கு ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்திலுள்ள வம்சவரலாற்று அட்டவணையும் அதாரமாயுள்ளது. ஏனெனில்,

---

[20] A.P.Ross, *Creation and Blessing: A Guide to the Study and Exposition of Genesis*, p. 109; G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, p. 19; D.Batten, ed., *The Creation Answers Book*, p. 39.

[21] D.F.Kelly, *Creation and Change: Genesis 1:1-2:4 in the Light of Changing Scientific Paradigms*, p. 107; R.D.Skinner, *Studies in Genesis: A Creation Commentary*, p. 67; M.Rydelnik & M.Vanlaningham, ed., *The Moody Bible Commentary*, p. 29; J.C.Laney, *Answers to Tough Questions: A Survey of Problem Passages and Issues*, p. 17; J.D.Currid, *Genesis Volume 1: Evangelical Press Study Commentary*, p.39.

[22] K.Ham, ed., *The New Answers Book 2: Over 30 Questions on Creation/Evoution and the Bible*, p. 56; A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, p. 45; A.E.Steinmann, *Genesis: Tyndale Old Testament Commentary*, p. 61.

[23] இறைவனாகிய இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்தார் என்பதை அறிந்துகொள்வதற்கு எனது “இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தாரா?” என்னும் நூலைப் பார்க்கவும்.

[24] J.Flanigan, *Psalms: Ritchie Old Testament Commentary*, p. 243.

[25] G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, p. 19; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 9; M.Rydelnik & M.Vanlaningham, ed., *The Moody Bible Commentary*, p. 29.

[26] J.J.Davis, *Paradise to Prison: Studies in Genesis*, p. 49; H.Blocher, *In the Beginning: The Opening Chapters of Genesis*, p. 44; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 33; F.Brown, S.Driver and C.Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament*, p. 398. Oxford: Clarendon Press, 1951.

[27] D.E.Gowan, *Genesis 1-11: International Theological Commentary*, p. 22; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 8; R.C.Sproul, *Truths We Confess: A Layman's Guide to the Westminster Confession of Faith*, p. 123.

இவ்வட்டவணையின்படி, சேத் பிறக்கும் போது ஆதாமுக்கு 130 வயதாக இருந்தது. எனினும் இது, சிருஷ்டிப்பின் ஆறாவது நாளிலிருந்து கணிப்பிடப்பட்டுள்ள வயதாகவே உள்ளது. எனவே, சிருஷ்டிப்பின் நாட்கள் நீண்டகாலப் பகுதிகள் என்றால், ஆறாவது நாளும் நீண்டகாலப் பகுதியாகவே இருக்கவேண்டும். அப்படியென்றால் சேத் பிறந்தபோது ஆதாமுக்கு கோடிக்கணக்கான வயதாகியிருக்க வேண்டும். ஆனால், சேத் பிறந்தபோது ஆதாம் 130 வயதுடையவனாய் இருந்ததினால் அவன் சிருஷ்டிக்கப்பட்ட ஆறாவது நாள் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட நாளாகவே உள்ளது.[28] இல்லையென்றால் ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்திலுள்ள வம்சவரலாற்று அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மனிதர்களின் வயது தவறானது என்றே கூறவேண்டும். மேலும், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்திலுள்ள நாட்கள் சொல்லர்த்தமானவை அல்ல என்றால், தேவன் உட்பட இவ்வதிகாரத்தில் உள்ள ஏனையவையும் சொல்லர்த்தமானவை அல்ல என்றே கூறவேண்டும். ஆனால், இவ்வதிகரத்தில் தேவனும், அவரால் சிருஷ்டிக்கப்பட்டவையும் சொல்லர்த்தமானவைகளாகவே இருப்பதினால், சிருஷ்டிப்பின் நாட்களை மாத்திரம் சொல்லர்த்தமாக எடுக்காமல் அதை நீண்ட காலத்திற்கான அடையாளம் என்று கூறுவது முரண்பாடான ஒரு விளக்கமாகவே உள்ளது.[29]

தேவன் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட ஆறு நாட்களிலேயே சகலத்தையும் சிருஷ்டித்தார் என்பதற்கான உறுதியான ஆதாரம் யாத்திராகமம் 20:11இல் உள்ளது. அதாவது, இஸ்ரவேல் மக்கள் ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாவது நாளில் ஓய்ந்திருக்க வேண்டும் என்று தேவன் அறிவுறுத்தும்போது, இதற்கான காரணமாக சிருஷ்டிப்பின் ஆறு நாட்களும் தேவன் ஓய்ந்திருந்த ஏழாவது நாளுமே யாத்திராகமம் 20:11இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால்தான், "ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள். அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக் காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம்" என்று கூறும் மோசே, அடுத்த வசனத்தில், "கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத் தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால், கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் (யாத்.20:8-11)" என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இஸ்ரவேல் மக்கள் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட ஆறு நாட்கள் வேலை செய்து விட்டு, ஏழாவது நாளில் ஓய்ந்திருக்கும்படியாகவே கட்டளையிடப்பட்டுள்ளதினால், இதற்கு மாதிரியாகக் காண்பிக்கப்படும் ஆறு நாட்கள் சிருஷ்டிப்பும் ஏழாவது நாள் ஓய்வும் இருபத்து நான்கு மணிநேர நாட்களாகவே உள்ளன. இல்லையென்றால், இஸ்ரவேல் மக்களை கோடிக்கணக்கான ஆண்டுகளைக்கொண்ட ஆறு யுகங்கள் வேலைசெய்துவிட்டு, ஏழாவது யுகத்தில் ஓய்ந்திருக்கும்படி சொல்லும் அர்த்தமற்ற ஒரு கட்டளையாகவே யாத்திராகமம் 20:8-11ஐ வியாக்கியானம் செய்யவேண்டும். எனவே, ஆறு நாட்கள் வேலையும் ஏழாவது நாள் ஓய்வும் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட நாட்களின்படி இருப்பதினால், இதற்கு மாதிரியாகக் காண்பிக்கப்பட்டுள்ள ஆதியாகம சிருஷ்டிப்பின் நாட்களும் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட ஆறு நாட்கள் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது.[30] உண்மையில், தற்கால விஞ்ஞானக் கல்வியின் செல்வாக்கே, சிருஷ்டிப்பின் நாட்களை நீண்ட காலப் பகுதிகளாகப் பலர் கருதுவதற்கான காரணமாய் உள்ளது. ஆனால், அண்மைக் கால விஞ்ஞானக் கல்வியைக் கருத்திற்கொள்ளாமல், அதியாகமம் முதலாம் அதிகாரத்தை வாசித்தால், சிருஷ்டிப்பின் நாட்கள் இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட நாட்கள் எண்ணும் எண்ணமே ஏற்படும். எனவே, நாம் நம்முடைய விஞ்ஞான அறிவை வைத்தல்ல, அதியாகம

[28] M.Rydelnik & M.Vanlaningham, *The Moody Bible Commentary*, pp. 29-30.

[29] J.S.Feinberg, *No One Like Him: The Doctrine of God*, pp. 613-614.

[30] K.Ham, ed., *The New Answers Book: Over 25 Questions on Creation/Evolution and the Bible*, p. 27; D.F.Kelly, *Creation and Change: Genesis 1:1-2:4 in the Light of Changing Scientific Paradigms*, p. 109; R.D.Skinner, *Studies in Genesis: A Creation Commentary*, p. 68.

ஆசிரியர் எத்தகைய அர்த்தத்தில் நாள் என்னும் சொல்லை உபயோகித்துள்ளார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.[31]

சில கிறிஸ்தவர்கள், 2பேதுரு 3:8ஐ ஆதாரமாகக்கொண்டு, ஆதியாகம சிருஷ்டிப்பின் நாட்கள் கோடிக்கணக்கான யுகங்கள் என்று எண்ணுகின்றனர். ஏனெனில், இவ்வசனத்தில் "தேவனுக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருப்பதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், "இவ்வசனத்தை ஆதாரமாகக்கொண்டு ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிருஷ்டிப்பின் நாட்களை வியாக்கியானம் செய்வது வேதவசனத்தைத் தவறாக உபயோகிக்கும் செயல்முறையாகவே உள்ளது."[32] ஏனெனில், தேவனுக்கு நாட்களும் வருஷங்களும் எப்படி இருக்கின்றன என்பதைப் பேதுரு இவ்வசனத்தில் சுட்டிக்காட்டுகிறாரே தவிர, அவர் ஆதியாகம நாட்களைக் கருத்திற்கொண்டவராக இவ்வாறு கூறவில்லை.[33] மேலும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை தாமதமாவதற்கான காரணத்தையே பேதுரு இவ்வசனத்தில் சுட்டிக்காட்டுகிறர் என்பதை இவ்வசனம் இடம்பெறும் பகுதியை முழுமையாக வாசித்தால் புரிந்துகொள்வோம். அதாவது, நமக்கு ஆயிரம் வருஷம் நீண்ட காலமாக இருப்பது போல தேவனுக்கு இருப்பதில்லை என்பதினால், நமக்கு இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை தாமதமாவதாகத் தென்பட்டாலும் தேவனுக்கு எவ்விதத் தாமதமும் ஏற்படவில்லை என்பதையே பேதுரு சுட்டிக்காட்டுகிறார். எனவே, பேதுருவின் கூற்றை சிருஷ்டிப்பின் நாட்களைப் பற்றிய விளக்கமாகக் கருதமுடியாது.

காலத்தை சிருஷ்டித்த தேவன் (அதாவது தன்னைத்தானே சுற்றும் விதத்தில் பூமியை சிருஷ்டித்து காலக்கணிப்பீட்டு முறையை உருவாக்கிய தேவன்) "கால வரையறை எதுவும் இல்லாத நித்தியராக இருப்பதினால், எல்லா காலமும் அவருக்கு ஒரே மாதிரியாகவே இருக்கின்றது."[34] அதாவது, நீண்ட காலம் குறுகிய காலம் என்னும் வரையறைகளுக்கு உட்படாதவராக தேவன் இருக்கின்றார். இதனால், நமக்கு ஒரு நாள் குறுகிய காலப் பகுதியாகவும் ஆயிரம் வருஷம் நீண்ட காலப் பகுதியாகவும் இருப்பதுபோல, தேவனுக்கு இருப்பதில்லை. அவருக்கு எல்லாம் ஒரே மாதிரியாகவே இருக்கும். இதனால், "நமக்கும் தேவனுக்கும் காலம் ஒரே மாதிரியானதாக இருப்பதில்லை."[35] எனவே, "நம்முடைய கால வரையறைகளுக்குள் தேவனைக் கொண்டுவர முடியாது."[36] இதனால்தான், தேவனுக்கு ஆயிரம் வருஷம் ஒரு நாள்போலவும் ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் இருப்பதாகப் பேதுரு குறிப்பிட்டுள்ளார். அதாவது, காலக் கணிப்பீட்டுக்கும் கால வரையறைகளுக்கும் அப்பாட்பட்டவராகத் தேவன் இருக்கின்றார். இதைப்போலவே 90ஆம் சங்கீதத்திலும், தேவனுடைய பார்வையில் "ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது" (சங்.90:4) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில், இவ்விரு வசனங்களும் தேவனுக்கும் மனிதருக்கும் காலம் எப்படிப்பட்டதாயிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டுகிறதே தவிர, ஆதியாகம நாட்கள் எப்படிப்பட்டவை என்பதை விளக்கவில்லை. ஏனெனில், இருபத்து நான்கு மணிநேரம் உள்ள ஆறு நாட்களில் தேவன் சகலத்தையும் சிருஷ்டித்துள்ளார் என்பதையே ஆதியாகமம் முதலாம் அதிகாரம் அறியத்தருகின்றது.

[31] L.Berkhof, *Systematic Theology*, pp. 154-155; H.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 115.
[32] D.Batten, ed., *The Creation Answers Book*, p. 41.
[33] J.C.Laney, *Answers to Tough Questions: A Survey of Problem Passages and Issues*, p. 16.
[34] J.B.Mayor, *The Epistle of St.Jude and the Second Epistle of St.Peter*, p. 156.
[35] M.Green, *2Peter and Jude: Tyndale New Testament Commentary*, p. 145.
[36] D.E.Hiebert, *Second Peter and Jude: An Expositional Commentary*, p. 153.